

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைகளின் சார்பில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு முழுவதும் 2025– 2026 ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 5,34,017 மாணவ, மாணவியருக்கு 241 கோடி ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 1,448 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ. வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவில் கலைநிகழ்ச்சிகள் நடத்திய பள்ளிகளின் மாணவ, மாணவியருக்கு கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ. வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

## 5,34,000 மாணவ, மாணவிகளுக்கு ரூ.241 கோடி மதிப்பிலான மிதிவண்டிகள் வழங்கும் விழா:

# உலக நாடுகளுடன் போட்டி போடுகிற அளவுக்கு, தமிழ்நாட்டை உயர்த்த மாணவ - மாணவிகள் அனைவரும் நன்றாகப் படிக்க வேண்டும்!

## காரைக்குடியில் நடைபெற்ற குழந்தைகள் தின நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

*சிவகங்கை,நவ.15-*

***சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நடந்த குழந்தைகள் தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, மாநிலம் முழுவதும் 5,34,000 மாணவ, மாணவிகளுக்கு ரூ.241 கோடி மதிப்பிலான மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.***

***விழாவில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 11 ஆயிரத்து 449 மாணவ மாணவிகளுக்கு, நேரில் மிதிவண்டிகளை வழங்கினார். மேலும், மாநிலம் முழுவதும் சிறப்பாக செயல்படும் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு விருதுகளை அளித்துப் பாராட்டினார்.***

***அப்போது அவர், ``தமிழ்நாட்டை உலக நாடுகளுடன் போட்டி போடுகிற அளவுக்கு, நாம் உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்த வேண்டும் என்றால், இங்கு வந்துள்ள மாணவ-மாணவிகள் அனைவரும் நன்றாகப் படிக்க வேண்டும். அதைவிட முக்கியமாக, சிந்திக்கும் திறனை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்” என்று குறிப்பிட்டார்.***

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:***

*மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் முதலில் எனது, குழந்தைகள் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ்நாடு முழுவதும் பள்ளி மாணவர்களுக்கு சைக்கிள் வழங்குவது, `குழந்தைகள் தின விழா', `சிறந்த அரசு தொடக்கப்பள்ளி - நடுநிலைப் பள்ளிகளுக்கு விருது மற்றும் சான்றிதழ்கள்' வழங்கும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.*

*இன்றைக்கு, சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் சுமார் 11 ஆயிரத்து 449 மாணவச் செல்வங்களுக்கு சைக்கிள்களை வழங்க இருக்கிறோம். அதேபோல், தமிழ்நாடு முழுவதும், இன்றைக்கு 5 லட்சத்து 35 ஆயிரம் மாணவர்களுக்கு மிதிவண்டிகளை நாம் வழங்க இருக்கிறோம்.*

### ‘திராவிட மாடல்’ அரசு

*பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் பேசும்போது குறிப்பிட்டார், கொடுப்பது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், வாங்குவது அவரின் பள்ளிக்கல்வித் துறை என்றும் அவர் குறிப்பிட்டு, நன்றி தெரிவித்துப் பேசினார். அதில் ஒரு சின்ன திருத்தம்; கொடுப்பது நம் திராவிட மாடல் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வாங்குவது இங்கு வந்திருக்கின்ற பள்ளி மாணவர்கள்.*

*இதில் இன்னொரு பெருமைக்குரிய விஷயம் என்னவென்றால், மாநிலம் முழுவதும் மிதிவண்டிகள் பெறுவதில் ஆண்களைவிட, பெண்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். அதிகம் என்றால், ஏதோ ஆயிரம், இரண்டாயிரம் பேர் அதிகம் அல்ல. ஆண்களைவிட, பெண்கள் கிட்டத்தட்ட 57 ஆயிரம் பேர் அதிகமாக இன்றைக்கு மிதிவண்டிகளைப் பெற இருக்கிறீர்கள்.*

### 100 ஆண்டுகள் போராட்டம்

*ஆண்களைவிட பெண் பிள்ளைகள் அதிகம் படிக்க வருவதற்கான அடையாளம்தான் இந்த எண்ணிக்கை. இதுதான் நம் திராவிட மாடல் அரசின், நம் முதலமைச்சரின் வெற்றி. இன்றைக்கு இவ்வளவு பெண்கள் படிக்கிறீர்கள். ஒரு காலத்தில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வருவதற்கு அனுமதி கிடையாது. படிப்பதற்கு உரிமை கிடையாது. பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள். அவற்றையெல்லாம் தலைகீழாக மாற்றி, பெண்கள் எல்லோருமே படிக்க வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்தியது, நம் திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிலைமை சாதாரணமாக வரவில்லை. கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் போராட்டத்துக்குப் பிறகுதான் நாம் இந்த நிலையை அடைந்திருக்கிறோம். பல பேரின் தியாகங்களின் பயனாகத்தான், இங்கு நீங்கள் இத்தனை ஆயிரம் பேர் படிக்க வந்துள்ளீர்கள். இந்த வரலாற்றை எல்லாம் மாணவர்களாகிய நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் நம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார். மாணவச் செல்வங்கள் அனைவரும் நன்றாகப் படிக்க வேண்டும். வாழ்க்கையில், நீங்கள் அனைவரும் படித்து நல்ல நிலைமைக்கு முன்னேறி வர வேண்டும். அதற்காகத்தான் நம் அரசும், முதலமைச்சர் அவர்களும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.*

### கல்வி சக்தி வாய்ந்தது

*சமீபத்தில், `கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்ற ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியை நம் அரசு நடத்தியது. உங்களில் பல பேர் தொலைக்காட்சிகளிலும், யூடியூப்களிலும் பார்த்திருப்பீர்கள். கல்வி, ஒவ்வொருவர் வாழ்க்கையையும் எந்த அளவுக்கு முன்னேற்றும் என்பதற்கு உதாரணமாக, அந்த நிகழ்ச்சியைப் பார்த்த உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஏழ்மை நிலையில் இருக்கிற ஒரு குடும்பத்தை - அந்த குடும்பத்தில் உள்ள ஒருவரின் கல்வி எந்த அளவுக்கு உயர்த்தும் என்பதை அந்த நிகழ்ச்சியைப் பார்த்த அத்தனை பேருக்கும் புரிந்திருக்கும். கல்வி என்பது சக்தி வாய்ந்த விஷயம். கல்வி உங்களுக்கு பணத்தையும் பொருளையும் மட்டும் தராது, அது உங்களுக்கு நம்பிக்கையையும் சக்தியையும் தரும். அதனால்தான், இந்தியாவிலேயே கல்விக்காக அதிக திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்துகிறார். படிப்பு மூலமாகப் பெறுகிற அறிவை, நீங்கள் சுயமாக சிந்திக்கப் பயன்படுத்த வேண்டும்.*



### யானையும் யானைப்பாகனும்

*ஒரு யானைப்பாகன், அவனின் யானையை, ஒரு சிறிய கயிறு மூலமாகக் கட்டிப் போட்டிருந்தான். அதைப் பார்த்த ஒரு சுற்றுலாப் பயணிக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த சுற்றுலாப் பயணி, அந்த யானைப் பாகனிடம் கேட்டிருக்கிறார்,*

*`இவ்வளவு பெரிய யானையை, எப்படி இந்த சின்னக் கயிற்றால் கட்டிப்போட்டிருக்கீங்க. யானை அந்தக் கயிற்றை அறுத்துவிட்டு ஓடிவிடாதா?' என்று கேட்டார். அதற்கு, அந்த யானைப்பாகன் சொன்னான், இந்த யானை, குட்டியாக இருக்கும்போது, அந்தக் கயிற்றை வைத்துத்தான் கட்டிப் போட்டிருந்தேன். அந்த யானை வளர்ந்து பெரிதாகிவிட்டது என்றாலும் அந்தச் சிறிய கயிற்றால்தான் கட்டிப்போடுகிறேன். குட்டியாக இருந்தப்போது அறுக்க முடியாத கயிற்றை, இப்போதும் அறுக்க முடியாது என்று இந்த யானை நினைத்துக்கொண்டு இருக்கிறது' என்று சொன்னான்.*

*நம் மனித மூளையும் இப்படித்தான். நமக்கு இதெல்லாம் வராது, இதையெல்லாம் நம்மால் செய்ய முடியாது என்று நாம் யாரும் நினைத்துவிடக் கூடாது. அப்படி நினைத்தால், நமக்கும் அந்த யானையின் நிலைமைதான். ஆகவே, நாம் அனைவரும் குறிப்பாக, இங்கு வந்துள்ள மாணவச் செல்வங்களாகிய நீங்கள், தொடர்ந்து முயற்சி மேல் முயற்சி செய்துகொண்டே இருக்க வேண்டும். அதற்கு, உங்களின் சிந்தனை ஆற்றலை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.*

### நீங்கள்தான் எங்களுக்கு ஆசிரியர்கள்

*இன்று நாம் அனைவரும் மகிழ்ச்சியுடன் குழந்தைகள் தினம் கொண்டாடுகிறோம். உண்மையிலேயே, பெரியவர்களைவிட அதிகமாக சிந்திக்கிறவர்கள் இங்கு வந்துள்ள மாணவச் செல்வங்களான குழந்தைகள் நீங்கள்தான். உங்களிடம் நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். எப்படி எல்லாம் கேள்வி கேட்க வேண்டும் என்பதை உங்களிடம் கற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப் போனால், சில நேரங்களில் நீங்கள்தான் எங்களுக்கு ஆசிரியர்கள். வீட்டில் எங்கள் அப்பா, அம்மா கேட்கிற கேள்விகளுக்கு எங்களால் பதில் சொல்ல முடியும். ஆனால், என் மகள் கேட்கிற கேள்விக்கு, என்னால் உடனே பதில் சொல்ல முடியாது. அந்த அளவுக்குத் தெளிவாகக் கேள்வி கேட்பீர்கள்.*

### பகுத்தறிவு என்றால் என்ன?

*உங்கள் மூளையில் ஒவ்வொரு நொடியும் பல கேள்விகள் தோன்றிக்கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட அந்தக் கேள்விகளை நாம் கேட்டுவிட வேண்டும். சிந்தித்து கேள்வி கேட்க வேண்டும். அதனால்தான் நம் தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் அவர்கள் எல்லாம், பகுத்தறிவு பற்றி தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருந்தார்கள்.*

*பகுத்தறிவு என்றால் என்ன? எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள்வி கேட்க வேண்டும். பதில் கிடைக்கும்வரை கேள்வி கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான், அதற்கான சரியான பதில் கிடைக்கும், ஒரு தெளிவும் பிறக்கும். அப்படித் தொடர்ந்து தமிழர்கள் கேள்வி கேட்கத் தொடங்கியதால்தான், இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலமாக, கல்வியில் சிறந்த மாநிலமாக நம் தமிழ்நாட்டு மாணவர்களும், தமிழ்நாடும் சிறப்பாக விளங்கிக்கொண்டு இருக்கின்றன.*

*இன்னும் தமிழ்நாட்டை உலக நாடுகளுடன் போட்டி போடுகிற அளவுக்கு நாம் உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்த வேண்டும் என்றால், இங்கு வந்துள்ள மாணவ-மாணவிகள் அனைவரும் நன்றாகப் படிக்க வேண்டும். அதைவிட முக்கியமாக, சிந்திக்கும் திறனை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.*

*உங்களின் கல்வி வளர்ச்சிக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு நாளும், ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கின்ற மாணவச் செல்வங்கள் 21 லட்சம் பள்ளிக் குழந்தைகள், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள்.*

*பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்ல, கல்லூரி மாணவர்களுக்கும் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்வி கற்கச் சேரும் மாணவர்களுக்கு `தமிழ்ப்புதல்வன்', மாணவிகளுக்கு `புதுமைப்பெண்' என்ற திட்டங்களின்மூலம் மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் 8 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளார்கள்.*

### விலையில்லா மடிக்கணினித் திட்டம்

*இன்றைக்கு, உங்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் மிதிவண்டிகள் கொடுத்திருக்கிறார். இன்னும் சில மாதங்களில், கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட இருக்கிறது. இன்னும் சில வருடங்களில் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிக்குச் செல்ல இருக்கிறீர்கள். உங்களுக்கும் நிச்சயமாக, நம் முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினி கொடுப்பார்.*

*பள்ளியில் மட்டுமில்லை, உயர்கல்வியை முடித்த பிறகும், உங்களுக்கு உதவுவதற்காக நம் முதலமைச்சர் கொண்டுவந்த திட்டம், `நான் முதல்வன் திட்டம்'. இரண்டு நாளைக்கு முன் நீங்கள் தொலைக்காட்சியிலும், செய்தியிலும் பார்த்திருப்பீர்கள். இந்த ஆண்டு, தமிழ்நாட்டில் இருந்து, 155 மாணவர்கள், யூ.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.*

*யூ.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்காணல் என ஒவ்வொரு நிலையிலும் `நான் முதல்வன்' திட்டம் மூலமாக நம் அரசு ஊக்கத்தொகை கொடுத்து உற்சாகப்படுத்துகிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் தெரிந்துகொண்டு, நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.*

### அதற்குப் பெயரே ரீல்ஸ்

*நாம் அனைவரும் இன்ஸ்டாகிராம், யூடியூப்களில் ரீல்ஸ் பார்க்கிறோம். ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன், அந்த ரீல்ஸ் மட்டுமே வாழ்க்கை இல்லை. அதில் முக்கால் வாசி பொய் என்பதால்தான், அதற்குப் பெயரே ரீல்ஸ். ரியலாக நீங்கள் வெற்றிப்பெற வேண்டும் என்றால் கல்விதான் உங்களுக்கு என்றைக்கும் கை கொடுக்கும் என்பதை நீங்கள் மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும். கல்வியுடன் சேர்த்து, நீங்கள் விளையாட்டிலும் ஆர்வம் செலுத்துங்கள்.*

*நீங்கள் கல்வியில் முன்னேறினால், உங்களுடைய குடும்பம் பொருளாதாரத்தில் முன்னேறும். உங்களுக்கே அந்த நம்பிக்கை வரும். உங்கள் குடும்பம் முன்னேறும்போது, ஒட்டுமொத்த தமிழ்நாடும் முன்னேறும். அந்த முன்னேற்றத்தை உங்களுடைய கல்வியில் இருந்துதான் தொடங்க முடியும்.*

*உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மிதிவண்டிகளுக்கு நீங்கள்தான் உரிமையாளர். அதை, நீங்கள் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு, பராமரிக்க வேண்டும். இங்கு பல மாணவச் செல்வங்கள், பல ஆசிரியர்கள் வந்திருக்கிறீர்கள். பள்ளிக்கல்வித் துறை அமைச்சரும் வந்திருக்கிறார். அவரை வைத்துக் கொண்டு ஆசிரியர் பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். தயவுசெய்து, பள்ளிக்கூடங்களில் விளையாட்டு வகுப்பைக் கடன் வாங்கி, மற்ற வகுப்புகளை நடத்தாதீர்கள், முடிந்தால் உங்களின் வகுப்பை கடன் கொடுத்து, மாணவர்களை அதிகமாக விளையாட்டுத் துறையில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளியுங்கள்.*

*படிப்பு எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு மாணவச் செல்வங்களின் உடல் ஆரோக்கியமும் மிக மிக முக்கியம். எனவே, இங்கு வந்திருந்து மிதிவண்டிகளைப் பெற்ற மாணவர்களுக்கும், சிறந்த பள்ளிகளுக்கான விருதுகளைப் பெற்ற ஆசிரியப் பெருமக்களுக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை யாற்றினார்.*

### பங்கேற்றவர்கள்

*அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, மாங்குடி, முத்துராஜ், பள்ளிக் கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் மருத்துவர் சந்திரமோகன் ஐ.ஏ.எஸ்., பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறை அரசுச் செயலாளர் சரவண வேல்ராஜா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் பொற்கொடி ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி மேயர் முத்துதுரை, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் கண்ணப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் ஐ.பி.எஸ்., தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நரேஷ், தனியார் பள்ளிகள் துறை இயக்குநர் குப்புசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் செல்வசுரபி, துணை மேயர் குணசேகரன், முன்னாள் அமைச்சர் தென்னவன், சுப.வீரபாண்டியன், மருது அழகுராஜ், நாகனி செந்தில், சேங்கை மாறன், ஜோன்ஸ் ரூசோ, அழகப்பா பல்கலைக்கழகத் துணை வேந்தர் ரவி, மற்றும் அரசு அதிகாரிகள், மாணவ மாணவிகள் விருது பெறும் பள்ளிகளின் நிர்வாகிகள் கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.*